# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## July 14, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. சாகித்திய அகாதெமி விருது பெற்ற எழுத்தாளர் பூமணி (79), உடல்நலக் குறைவால் சென்னையில் காலமானார்.
   i. இவர் எழுதிய 'வெக்கை', 'பிறகு', 'வாய்க்கால், வரப்புகள்', 'அஞ்ஞாடி' போன்ற நாவல்கள் புகழ்பெற்றவை. பல்வேறு சிறு கதைகளை எழுதியுள்ளார். 'அஞ்ஞாடி' நாவலுக்காக 2014- இல் சாகித்திய அகாதெமி விருது பெற்றார்.
   ii. பூமணி எழுதி 1982-இல் வெளியான 'வெக்கை' நாவல், இயக்குநர் வெற்றிமாறன் இயக்கத்தில் ‘அசுரன்’ திரைப்படமாக வெளியானது.
   iii. 1997-இல் ‘கருவேலம் பூக்கள்' என்ற திரைப்படத்தை பூமணி இயக்கினார். இந்தத் திரைப்படத்தை இந்திய தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகமும், தூர்தர்ஷன் தொலைக்காட்சி நிறுவனமும் கூட்டாக தயாரித்தன. இத்திரைப்படம் சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டது.

2. அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தனது அரசாங்கத்தை மறுசீரமைப்பதற்கான புதிய திட்டத்தை அறிவித்ததைத் தொடர்ந்து, உக்ரைனியப் பிரதமர் யூலியா ஸ்விரைடென்கோ பதவி விலகினார்; இந்த மறுசீரமைப்பு ஒரு புதிய அரசியல் உத்தியின் ஒரு பகுதி என்று அதிபர் விவரித்தார்.

3. மனோஜ் குமார் சோந்தாலியா, 'தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' குழுமத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக உள்ளார்.

4. நடப்பாண்டின் 3-ஆவது கிராண்ட்ஸ்லாம் போட்டியான விம்பிள்டனில், ஆடவர் ஒற்றையர் பிரிவில் நடப்பு சாம்பியனாக களம் கண்ட இத்தாலிய வீரர் யானிக் சின்னர், பட்டத்தை தக்கவைத்துக் கொண்டார்.
   i. உலகின் நம்பர் 1 வீரரான சின்னர், நம்பர் 2 வீரரான ஜெர்மனியின் அலெக்ஸாண்டர் ஸ்வெரெவை வீழ்த்தி, கோப்பையைக் கைப்பற்றினார்.

5. இங்கிலாந்து மகளிர் அணிக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்திய மகளிர் அணி 270 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி கண்டது. 'தி ஹோம் ஆஃப் கிரிக்கெட்' எனப்படும் லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற முதல் மகளிர் டெஸ்ட் கிரிக்கெட்டில் வெற்றி பெற்ற அணியாக இந்தியா வரலாறு படைத்துள்ளது.

6. ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா மீண்டும் தற்காலிக உறுப்பினராவதற்கான அதிகாரபூர்வ பிரசாரத்தை வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தொடங்கிவைத்தார்.
   i. கடந்த 2021-22-ஆம் ஆண்டில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் தற்காலிக உறுப்பினராக இந்தியா இருந்தது. அந்த கவுன்சிலில் 2028-29-ஆம் ஆண்டு தற்காலிக உறுப்பினராக, அடுத்த ஆண்டு ஜூன் மாதம் தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தலில் ஆசிய-பசிபிக் குழு பிரிவில், ஒரு தற்காலிக உறுப்பினர் இடத்துக்கு இந்தியா-தஜிகிஸ்தான் போட்டியிட உள்ளன. அந்த இடத்துக்கு இந்தியாவை தேர்வு செய்வதற்கான அதிகாரபூர்வ பிரசாரத்தை அமைச்சர் ஜெய்சங்கர் தொடங்கி வைத்தார்.
   ii. அமெரிக்கா சென்ற அவர், நியூயார்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில், தற்காலிக உறுப்பினராவதற்கான பிரசாரத்தை தொடங்கிவைத்தார். இந்த நிகழ்ச்சியில் அமெரிக்க தூதர்கள், அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். தேர்தலில் இந்தியா தேர்வு செய்யப்பட்டால், 2 ஆண்டுகள் தற்காலிக உறுப்பினராக இருக்கும்.

7. வெளிநாடு வாழ் இந்தியர்களிடமிருந்து அந்நிய செலாவணி நிதி திரட்டுவதை மேம்படுத்த புதிய சேமிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டும் என மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் திங்கள்கிழமை தெரிவித்தார்.
   i. பொதுத் துறை வங்கிகள், நிதி நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகளுடனான (சிஇஓ) ஆய்வுக் கூட்டம் நிர்மலா சீதாராமன் தலைமையில் நடைபெற்றது. அப்போது என்ஆர்ஐ-க்கள் இந்திய வங்கிகளில் தங்களது சேமிப்புகளை வெளிநாட்டு கரன்சியில் பராமரிக்கும் வெளிநாடு வாழ் நபரின் வெளிநாட்டு கரன்சி (வங்கி) சேமிப்புத் திட்டம் அல்லது எஃப்சிஎன் ஆர் (பி) திட்டம் மற்றும் வெளிப்புற வணிகக் கடன்கள் (இசிபி), வெளிநாட்டு கரன்சி கடன்கள் (ஓஎஃப்சிபி) திட்டத்தை விரிவுபடுத்துவது

குறித்து நிர்மலா சீதாராமன் பேசினார்.

ii. இதுகுறித்து நிதியமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'அந்நிய செலாவணி நிதி திரட்டும் நடைமுறைகளை மேம்படுத்த புதிய சேமிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தி என்ஆர்ஐ-க்களை அதிக அளவில் அணுக வேண்டும்.

iii. குஜராத்தில் உள்ள சர்வதேச நிதிச் சேவைகள் மையம் (ஐஎஃப்எஸ்சி), கிஃப்ட் நகரத்தின் நிதிச் சேவைகள் மற்றும் நிறுவன உள்கட்டமைப்புகளை வங்கிகள் பயன்படுத்த வேண்டும் என நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

iv. அவரது கருத்தை ஏற்ற பொதுத் துறை வங்கிகளின் தலைமை செயல் அதிகாரிகள், சிங்கப்பூர், ஹாங்காங், மேற்கு ஆசியா, பிரிட்டன், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் மேற்கூறிய திட்டங்களின்கீழ் சேமிக்க தயாராக இருப்பதாகத் தெரிவித்தனர்.

v. மேலும், இசிபியின்கீழ் 2026 அக் டோபர்-டிசம்பர் மாதங்களில் நிதி திரட்டும் பணிகள் தீவிரமாகும் எனவும் எஃப்சிஎன்ஆர்(பி)திட்டம் ஏற்கெனவே-சிறப்பாகச் செயல்படுவதாகவும் கூறினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

vi. முன்னதாக ரிசர்வ் வங்கி ஆளுநர் சஞ்சய் மல்ஹோத்ரா கடந்த ஜூன் 5-ஆம் தேதி நிதிக் கொள்கை அறிக்கையை வெளியிட்டார். அதில் புதிய எஃப்சிஎன்ஆர் (பி) சேமிப்புகளுக்கு நிகரான அமெரிக்க டாலர்-ரூபாய் பரிமாற்ற வசதி மற்றும் இசிபி-க்கள் மற்றும் ஓஎஃப்சிபி-க்களுக்கான பரிமாற்ற வசதிகள் குறிப்பிடப்பட்டன. அந்நிய முதலீட்டை ஈர்க்கவும் செலுத்துச் சமநிலையை (பிஓபி) வலுப்படுத்துவதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டு இவை அறிமுகப்படுத்தப்பட்டன.

vii. 2025-ஆம் நிதியாண்டில் எஃப்சி என்ஆர் (பி) சேமிப்புகள் ரூ.67,700 கோடியாக இருந்த நிலையில் (7.1 பில்லியன் டாலர்) 2026-ஆம் நிதியாண்டில் ரூ.9,026 கோடியாக குறைந்ததையடுத்து புதிய முன்னெடுப்புகளை ரிசர்வ் வங்கி அறிமுகப்படுத்தியது.

8. யூஸர் நேம் (பயனர் பெயர்) வசதி அறிமுகம் குறித்து விளக்கம் கேட்டு அனுப்பிய நோட்டீஸுக்கு சமூக வலைதளச் செயலிகள் தங்களது பதிலை தாக்கல் செய்துள்ளதாகவும், அது குறித்து ஆய்வு செய்து வருவதாகவும் மத்திய அரசு தெரிவித்தது.

i. நாட்டில் பலகோடி பயனர்கள், தங்களது தகவல் தொடர்புக்கு வாட்ஸ்ஆப், டெலிகிராம், சிக்னல் ஆகிய சமூக வலைதளச் செயலிகளைப் பயன்படுத்தி வருகின்றனர். அந்தச் செயலிகள், பயனர்கள் தங்கள் கைப்பேசி எண்ணுக்குப் பதிலாக யூஸர் நேம் வசதியை வைத்து, தகவலைப் பரிமாறும் வசதியை அறிமுகம் செய்யதிட்டமிட்டுள்ளன.

ii. ஆனால், இந்தப் புதிய வசதி அறிமுகமானால் பயனர்களின் தனிநபர் பாதுகாப்பு கேள்விக்குறியாகலாம், டிஜிட்டல் கைது போன்ற நிதிமோசடிகள் நடைபெறலாம், பிரபலமானவர் போல போலிக் கணக்கு உருவாக்கப்படலாம் என பல்வேறு தரப் பினராலும் கவலை தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, வாட்ஸ்ஆப்பின் தாய் நிறுவனமான மெட்டாவுக்கும், டெலிகிராம் மற்றும் சிக்னல் சமூக வலைதளச் செயலிகளுக்கும் விளக்கம் கேட்டு மத்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் நோட்டீஸ்களை அனுப்பியிருந்தது. அதில் புதிய யூஸர் நேம் வசதி குறித்து தெரிவிக்கப்பட்டுள்ள கவலைகளுக்கு எவ்வாறு தீர்வு காணப்படும் என்பது குறித்து மத்திய அரசால் விளக்கம் கோரப்பட்டிருந்தது. இந்த நோட்டீஸ் குறித்து, தில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சக செயலர் எஸ்.கிருஷ்ணணிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர் பதிலளிக்கையில், 'யூஸர் நேம் விவகாரத்தில், சில சமூக வலைதளச் செயலிகள் தங்களது பதிலை மத்திய அரசிடம் தெரிவித்துள்ளன. அந்தப் பதிலை மத்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ஆய்வு செய்கிறது. இதன்பிறகு அரசு தனது நிலைப்பாட்டை எடுக்கும். பதிலை அளிக்க சமூக வலைதளச் செய்லிகளுக்கு 7-10 நாள்கள் அவகாசம் அளிக்கப்பட்டிருந்தது. அதுபோல அந்தப் பதில்களை ஆராய மத்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்துக்கு அவகாசம் தேவைப்படுகிறது' என்றார்.

iii. மெட்டாவின் இன்ஸ்டாகிராம் செயலியில் குழந்தைகள் பாலியல் ரீதியில் துன்புறுத்தப்படுவது போன்ற விளம்பரங்கள் ஊக்குவிக்கப்பட்ட விவகாரத்தில் விளக்கம் கேட்டு, மெட்டாவுக்கு மத்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் முன்பு நோட்டீஸ் அனுப்பியிருந்தது. இதுகுறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு எஸ்.கிருஷ்ணன் பதிலளிக்கையில், 'மெட்டா நிறுவனம் தனது பதிலை அரசிடம் அளித்துள்ளது. அந்தப் பதிலை ஆய்வு செய்து வருகிறோம். இந்த ஆய்வை அடிப்படையாக வைத்து, அடுத்தகட்ட நடவடிக்கையை மத்திய அரசு எடுக்கும்' என்றார்.

9. தேசிய வைராலஜி நிறுவனம் (NIV) – புனே, மகாராஷ்டிரா

10. சுதந்திரத்தின் நூற்றாண்டு விழாவை நோக்கி நாடு பயணிக்கும் வேளையில், இந்தியாவின் உயர்கல்வி அமைப்பில் உள்ள கட்டமைப்பு ரீதியான குறைபாடுகளைச் சுட்டிக்காட்டும் வகையிலான ஓர் ஆய்வு.

i. உயர்கல்வியின் வரலாற்றுப் பின்னணி

- இந்தியாவின் சுதந்திரத்திற்குப் பிறகு, முதல் கல்வி அமைச்சரான மௌலானா அபுல் கலாம் ஆசாத், காலனித்துவ மனப்பான்மையிலிருந்து விடுபட்டு, வளர்ந்து வரும் ஜனநாயக நாட்டிற்கு ஏற்ற கல்வி கட்டமைப்பை உருவாக்க முயன்றார்.
- நவம்பர் 1948-இல், டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் தலைமையில் 'பல்கலைக்கழகக் கல்விக் குழு' (University Education Commission) அமைக்கப்பட்டது.
- இக்குழு ஆகஸ்ட் 1949-இல் தனது பரிந்துரைகளைச் சமர்ப்பித்தது; இப்பரிந்துரைகளே இந்தியாவின் நவீன உயர்கல்வி கட்டமைப்பிற்கு அடிப்படையாக அமைந்தன.
- நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்களின் தரத்தை ஒருங்கிணைக்கவும் பராமரிக்கவும், 'பல்கலைக்கழக மானியக் குழுவை' (UGC) அமைப்பதற்கான சட்டத்தை 1956-இல் இந்திய நாடாளுமன்றம் இயற்றியது.

ii. மாணவர் சேர்க்கை மற்றும் மக்கள்தொகை சார்ந்த சவால்கள்

- சுதந்திரம் அடைந்து 79 ஆண்டுகள் கடந்தும், 18 முதல் 24 வயதுக்குட்பட்டோருக்கான உயர்கல்வி மொத்தச் சேர்க்கை விகிதம் (GER) இன்னும் 30%-ஐ எட்டவில்லை.
- மாநிலங்களுக்கிடையே கல்வியின் தரம் மற்றும் மாணவர் சேர்க்கை விகிதங்களில் கடுமையான ஏற்றத்தாழ்வுகள் நிலவுகின்றன.
- இந்தத் தேக்கநிலையானது, 2047-ஆம் ஆண்டிற்குள் முழுமையாக வளர்ந்த இந்தியாவாக (விக்சித் பாரத்) மாற வேண்டும் என்ற தேசிய இலக்கை அடைவதில் ஒரு முக்கியத் தடையாகக் கருதப்படுகிறது.

iii. "அறிவுசார் மனிதவள வெளியேற்றம்" (Brain Drain) மற்றும் பொருளாதாரத் தாக்கம்

- உள்நாட்டில் கல்வித் தரம் குறைந்து வருவதால், இந்திய மாணவர்கள்

வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களை அதிகம் நாடிச் செல்கின்றனர். 2024-ஆம் ஆண்டில், சுமார் 13 லட்சம் (1.3 மில்லியன்) மாணவர்கள் வெளிநாடுகளில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களில் பயின்று வருகின்றனர்.

- வெளிநாட்டுக் கல்விக்கான கட்டணச் செலவு பெருமளவு அதிகரித்துள்ளது. 2013-14-இல் இச்செலவு 0.16 பில்லியன் டாலராக இருந்த நிலையில், 2023-24-இல் அது 3.4 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.
- வெளிநாடுகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதை எண்ணி இந்தியா பெருமைப்பட வேண்டுமா அல்லது உள்நாட்டிலேயே அதே தரத்திலான கல்வியை வழங்க இயலாத நிலையை எண்ணி வருந்த வேண்டுமா என்ற கேள்வி எழுகிறது.

iv. உயர்தரக் கல்வி நிறுவனங்களில் உள்ள காலிப் பணியிடங்கள்

- கல்வித் தரம் சரிவு காண்பதற்கான ஒரு முக்கியக் காரணம், ஆசிரியர்களின் கடும் பற்றாக்குறையாகும். இந்தியாவில் உள்ள 23 இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் (IITs), மொத்தம் 4,804 பேராசிரியர் பணியிடங்கள் (38.4%) காலியாக உள்ளன.
- முன்னணி ஐஐடி-களின் (IITs) நிலை:
- ஐஐடி கரக்பூரில் (IIT Kharagpur), தற்போது 50%-க்கும் மேற்பட்ட பேராசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன.
- ஐஐடி டெல்லியில் (IIT Delhi), பணியிடக் காலிப்பணியிட விகிதம் 39% ஆக உள்ளது.
- நிரந்தரப் பணியாளர்கள் இல்லாததால், தற்காலிக அல்லது இடைக்காலப் பேராசிரியர்களை நியமிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், இத்தகைய உயர்மட்டப் பதவிகளுக்குத் தேவையான ஆராய்ச்சித் தகுதிகள் (முனைவர் பட்டம் - PhD) பல விண்ணப்பதாரர்களிடம் இல்லை.

v. அமைப்புரீதியான மற்றும் அரசியல் சார்ந்த தடைகள்

- பல்கலைக்கழகங்களின் செயல்பாடுகளில் அரசியல் தலையீடு இருப்பது அவற்றின் நற்பெயரையும் தரத்தையும் பாதித்துள்ளது.
- கல்வி என்பது மத்திய மற்றும் மாநில அரசுகளின் கூட்டுப் பொறுப்பிற்குரிய பட்டியலில் (Concurrent List) இடம்பெற்றிருந்தாலும், பல்கலைக்கழகச் செயல்பாடுகளுக்கு யுஜிசி (UGC) விதிகள் முதன்மையான வழிகாட்டியாக இருக்க வேண்டும்; இருப்பினும்,

வெளிப்புற அழுத்தங்களால் இவை பெரும்பாலும் பலவீனப்படுத்தப்படுகின்றன.

- தரம் வாய்ந்த ஆசிரியர்களின் பற்றாக்குறை மற்றும் ஆராய்ச்சித் தகுதி பெற்ற பட்டதாரிகளின் பற்றாக்குறை போன்ற அமைப்புரீதியான குறைபாடுகளை இந்தியா சரிசெய்யாவிட்டால், முழுமையான வளர்ந்த நாடாக உருவெடுப்பது சாத்தியமற்றதாகிவிடும்.

### 11. எல் நினோ (El Nino) நிகழ்வின் தீவிரமடைதல் மற்றும் அதன் உலகளாவிய தாக்கத்தைக் குறைப்பதற்கான உத்திகள்.

i. அறிவியல் செயல்முறை மற்றும் புவியியல் பின்னணி

- பசிபிக் பெருங்கடல் உலகின் மிகப்பெரிய காலநிலை கட்டுப்பாட்டு மையமாகச் செயல்படுகிறது.
- எல் நினோ என்பது ஒரு இயற்கையான காலநிலை நிகழ்வாகும்; இதில் மத்திய மற்றும் கிழக்கு பசிபிக் பெருங்கடலின் மேற்பரப்பு வெப்பநிலை இயல்பை விட 0.5°C முதல் 2.5°C வரை உயர்கிறது.
- பொதுவாக, வர்த்தகக் காற்றுகள் கிழக்கிலிருந்து மேற்காக வீசி, வெப்பமான நீரை ஆசியா மற்றும் ஆஸ்திரேலியாவை நோக்கித் தள்ளுகின்றன; ஆனால் எல் நினோ காலங்களில், இந்தக் காற்றுகள் வலுவிழக்கின்றன அல்லது திசை மாறுகின்றன, இதனால் வெப்பமான நீர் கிழக்கு பசிபிக் பகுதியை நோக்கி நகர்கிறது.
- வெப்பநிலை உயர்வு தொடர்ந்து குறைந்தது ஐந்து மாதங்களுக்கு நீடித்தால், அது அதிகாரப்பூர்வமாக 'எல் நினோ' நிகழ்வாக அறிவிக்கப்படுகிறது.

ii. தற்போதைய உலகளாவிய நிலை: "சூப்பர் எல் நினோ" (Super El Nino)

- தற்போதைய செயற்கைக்கோள் தரவுகள், இந்த நிகழ்வு முன்னெப்போதும் இல்லாத வேகத்தில் தீவிரமடைந்து வருவதைக் காட்டுகின்றன; இதனால் சில விஞ்ஞானிகள் இதனை "சூப்பர் எல் நினோ" என்று வகைப்படுத்துகின்றனர்.
- அமெரிக்காவின் தேசிய பெருங்கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகம் (NOAA) மற்றும் உலக வானிலை ஆய்வு நிறுவனம் (WMO) ஆகிய இரண்டும், தற்போதைய சுழற்சி ஏற்கனவே தொடங்கிவிட்டதாக எச்சரித்துள்ளன.
- கவலைக்குரிய வகையில், பசிபிக் பெருங்கடலின் ஆழ்கடல் பகுதிகளில்

வெப்பநிலை சராசரியை விட 6°C வரை உயர்ந்துள்ளது.

iii. வரலாற்றுப் பின்னணி

- வரலாற்று ரீதியாக, 1997–1998 மற்றும் 2015–2016 ஆகிய ஆண்டுகள் மிகத் தீவிரமான எல் நினோ செயல்பாடுகள் பதிவான ஆண்டுகளாக உள்ளன.
- 1997–1998 நிகழ்வு தென் அமெரிக்காவில் பெரும் வெள்ளத்தையும், இந்தோனேசியாவில் கடுமையான காட்டுத்தீயையும் ஏற்படுத்தியது.
- 2023–2024 காலகட்டம், பொதுவான புவி வெப்பமடைதலுடன் இணைந்து, உலகளாவிய வெப்பநிலையை புதிய உச்சத்திற்கு உயர்த்தியது.

iv. பிராந்திய மற்றும் புவியியல் தாக்கங்கள்

- அமெரிக்கக் கண்டங்கள்: அமெரிக்கக் கண்டங்களின் சில பகுதிகள் கடுமையான மழைப்பொழிவு மற்றும் வெள்ளத்தை எதிர்கொள்ளக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ஆஸ்திரேலியா மற்றும் தென்கிழக்கு ஆசியா: இப்பகுதிகள் கடுமையான வறட்சி மற்றும் காட்டுத்தீ அபாயங்களுக்கு அதிக வாய்ப்புள்ள பகுதிகளாக உள்ளன.
- இந்தியாவின் மீதான தாக்கம்: இந்திய பருவமழை பொய்த்துப்போவதற்கு எல் நினோ ஒரு முக்கிய காரணமாகும். மழை பொய்க்கும்போது பயிர்கள் கருகி, உணவுப் பற்றாக்குறை மற்றும் பொருளாதார ஸ்திரமின்மைக்கு வழிவகுக்கிறது.
- 'லா நினா' (La Nina) உடனான ஒப்பீடு: 'லா நினா' என்பது இதற்கு நேர்மாறான ஒரு நிலையாகும்; இது கடல் நீர் வெப்பம் குறைவதைக் குறிக்கிறது. இது பொதுவாக இந்தியாவிற்கு நல்ல மழையைக் கொண்டுவந்தாலும், வடகிழக்கு பருவமழைக் காலத்தில் தமிழ்நாட்டில் கடுமையான வெள்ளப்பெருக்கை ஏற்படுத்தக்கூடும்.

v. சமூக-பொருளாதார மற்றும் சுகாதார விளைவுகள்

- மழைப்பொழிவில் ஏற்படும் இடையூறுகளால் நெல், கோதுமை மற்றும் சோளம் போன்ற அத்தியாவசியப் பயிர்களின் விளைச்சல் கணிசமாகக் குறைகிறது.
- நிலத்தடி நீர்மட்டம் வெகுவாகக் குறைவதாலும், நீர்த்தேக்கங்கள் மற்றும் ஏரிகள் வறண்டு போவதாலும் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படுகிறது.
- தீவிரமடையும் வெப்ப அலைகள், சுவாசக் கோளாறுகள் மற்றும்

தொற்றுநோய்கள் பரவும் அபாயத்தை அதிகரிக்கின்றன.

- கடல் நீர் வெப்பநிலை அதிகரிப்பு, ஆழ்கடல் சூழலமைப்புகள் மற்றும் கடல்வாழ் உயிரினங்களுக்குக் குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்துகிறது.

vi. மீட்சி உத்திகள்: தொழில்நுட்பத்தின் பங்கு

- செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, பல தசாப்த கால செயற்கைக்கோள் படங்கள், காற்றின் அழுத்தம் மற்றும் கடல் நீர் வெப்பநிலை ஆகியவை பகுப்பாய்வு செய்யப்படுகின்றன; இதன் மூலம் 'எல் நினோ' (El Nino) நிகழ்வுகளை மாதங்களுக்கு முன்பே துல்லியமாகக் கணிக்க முடிகிறது.
- AI சார்ந்த வானிலை மாதிரிகள், வெள்ளம், வறட்சி மற்றும் காட்டுத்தீ குறித்த முன்னெச்சரிக்கைகளை அரசுகள் வெளியிட உதவுகின்றன; இது ஆயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்ற வழிவகுக்கிறது.
- இத்தகைய மேம்பட்ட தொழில்நுட்பக் கருவிகள், சிறந்த திட்டமிடல் மூலம் விவசாயத் துறை சூழலுக்கு ஏற்ப மாறவும், பயிர் சேதத்தைக் குறைக்கவும் உதவுகின்றன.
- முழுமையான தீவிரத்தன்மை இன்னும் வெளிப்பட்டுக்கொண்டிருக்கும் தற்போதைய 'எல் நினோ' சுழற்சியை எதிர்கொள்ள, அறிவியல் பூர்வமான திட்டமிடலும் முன்கூட்டியே தயாராகுதல் நடவடிக்கைகளும் அவசியமானவையாகும்.